**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S No.  166 of 2023

Deposition of   D.W.1

Name of the Witness:  திரு.  கிருஷ்ணன்

Date :16.06.2026

**குறுக்கு  விசாரணை**

வாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். முத்தம்மாள் என்பவர் எனது தந்தை வழி பாட்டி ஆவார், அவர் இறந்து விட்டார். எனது தாத்தா முத்தம்மாவின் கணவர் பெருமாள், அவரும் இறந்து விட்டார். முத்தம்மாள் மற்றும் பெருமாளுக்கு யார் வாரிசுதாரர்கள் என்றால் குப்பன் (எ) முனுசாமி, வெங்கட்ராமன், சாந்தா ஆகியோர் தான் வாரிசுகள் ஆவர். குப்பன் (எ) முனுசாமிக்கு 2ம் பிரதிவாதி தான் மனைவி என்றால் சரிதான். குப்பன் (எ) முனுசாமி எனது தகப்பனார், 2ம் பிரதிவாதி மாதம்மாள் எனது தாயார். குப்பன் (எ) முனுசாமிக்கும், 2ம் பிரதிவாதிக்கு நானும், என்னோடு சேர்ந்து எனது சகோதரிகளும் ஆக 1 முதல் 3 வாதிகளும் அவரது குழந்தைகள் ஆகும். எனது அத்தை சாந்தா திருமணமான நிலையில் இறந்து விட்டார். எனது அத்தைக்கு 5, 6, 7 பிரதிவாதிகள் முறையே வாரிசுதாரர்கள் ஆவர். எனது சகோதரிகள் பாகபிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது பாட்டி முத்தம்மாவின் பிதுராஜ்ஜிதமாக வந்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், மேற்படி தாவா சொத்துக்கள் எனது பாட்டி முத்தம்மாவிற்கு அவரது தகப்பனார் முத்தையன் கொடுத்த சொத்துக்களாகும். தகப்பனார் பாகபிரிவினையில் கொடுத்ததால் தான் முத்தம்மா பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பாட்டி முத்தம்மா இறக்கும் வரை தாவா சொத்தை பொறுத்து எவ்வித

பரிமாற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல, 2003ம் ஆண்டு முத்தம்மாள் தனது சொத்தை பொறுத்து தனது மகன்களான குப்பன் (எ) முனுசாமி, மற்றும் வெங்கட்ராமன் ஆகியோருடன் சேர்ந்து, எனது அண்ணன் கோவிந்தசாமி மற்றும் எனது பேரில் கூட்டாக, நாங்கள் இருவரும் இளவர் என்ற காரணத்தினால் எனது தாயாரை காப்பாளராக போட்டு கிரையம் செய்து கொடுத்து விட்டனர். மேற்படி கிரையத்திற்கு எனது சகோதரிகளை தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு செல்லத்தக்காத கிரைய ஆவணத்தில் பெறப்பட்ட சொத்துக்களை, நானும் எனது அண்ணனும் சேர்ந்து, 4ம் பிரதிவாதி கிருஷ்ணன் என்பவருக்கு 27.07.2022ம் தேதி ஒரு கிரைய ஆவணம் ஏற்படுத்தியது வாதிகளின் பாகஉரிமையை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு 04.01.2023ம் தேதி கிரைய ஆவணம் 38/2023 படி 4ம் பிரதிவாதியிடமிருந்து அந்த கிரைய சொத்தை என் பெயரில் கிரையம் பெற்றது வாதிகளை கட்டுப்படுத்தாது மற்றும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானும், வாதிகளுடன் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் தான் மேற்படி சொத்திற்கு முழுமையான உரிமையாளர் ஆவேன். மேற்படி சொத்திற்கு நான் தான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியன உள்ளன. உண்மையிலேயே அது போல் ஆவணங்கள் இருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரிகளான வாதிகளுக்கு நகை, நட்டு போட்டு திருமணம் செய்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை, ஆனால் சீர்வரிசை செய்துள்ளோம். நாங்கள் எந்த காலத்திலும்

சீர்வரிசை செய்யவில்லை என்றும், அவர்களாகவே திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது தந்தை வழி பாட்டிக்கு வழிமுறையாக பாத்தியப்பட்டது என்றும், அதில் வாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்றும், வாதிகளின் உரிமையை தவிர்த்து ஏற்படுத்திய அனைத்து கிரையங்களும் செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றும், அதில் வாதிகளுக்கும் பாகம் செய்து தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.